ஶ்ரீ:

ஶ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

ராஜகோபாலதாஸன் அருளிச்செய்த

# ॥ திரு நரசிங்கத் திருமாலே ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்கராமாநுஜ மஹாதேஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திரு நரசிங்கத் திருமாலே ॥

## ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்மர்

ஒரு பிள்ளை வாய்மொழி காத்து⋆
  ஒருதூணை அங்கே பிளந்து⋆
இரு உருவம் தானே ஆகி⋆
  இணை இல்லா எழில் ஒளியாய்⋆
அருவுரு எல்லாம் அடைந்திடவே⋆
  திரு உரையால் தணிந்தவனே⋆
திரு நரசிங்கத் திருமாலே⋆
  நின் திருவடி அடைந்தேன் அடியேனே! (1)

## ஸ்ரீ ஜ்வாலா நரஸிம்மர்

நெருப்பாய் ஒளிரும் நிறைமூர்த்தி⋆
  நீராய் கரையும் நெடுமாலே⋆
இருப்பாய் இனிதாய் இலக்காக⋆
  இக்குகையே உனக்கு இடமாக⋆
விருப்புடன் அளிப்பாய் விலக்கின்றி⋆
  விரைவாய் பத்துடன் தனக்கின்றி⋆
திரு நரசிங்கத் திருமாலே⋆
  நின் திருவடி அடைந்தேன் அடியேனே! (2)

## ஸ்ரீ அஹோபில நரஸிம்மர்

அருகில் பாலன் அங்கே நிற்க⋆
  அசுரன் அவனும் மடியில் கிடக்க⋆
பெருகும் இன்ப பெருநிதியை⋆
  பொங்கும் கனலுடன் அளித்தவனே⋆

www.prapatti.com

அருமறை சாரம் அமலன் நீயே⋆
    பெரிய பெரிய எம் பெருமானே⋆
திரு நரசிங்கத் திருமாலே⋆
    நின் திருவடி அடைந்தேன் அடியேனே! (3)

ஸ்ரீ மாலோல நரசிம்மர்

வருக வருக எனும் சிரிப்புடனே⋆
    திருவை அணைத்த களிப்புடனே⋆
உருக உருக தொழும் உகப்பாலே⋆
    குறுக குறுக ஆறும் உன் தகவாலே⋆
தருக தருக என்றவள் பரிவாலே⋆
    பெறுக பெறுக பேறு அளிப்பாயே⋆
திரு நரசிங்கத் திருமாலே⋆
    நின் திருவடி அடைந்தேன் அடியேனே! (4)

ஸ்ரீ வராஹ நரஸிம்மர்

இருவர் ஒன்றாய் இங்கிருந்து⋆
    இரணியன் இருவர் உடல் பிளந்து⋆
பொருத்தம் மிகுந்த பல்லுயர்ந்து⋆
    கருத்துடன் பெண்ணை கீழ் இடர்ந்து⋆
வருத்தம் தீர்க்க அவள் வேண்டி⋆
    வான்வழி வழங்கிய வேதியனே⋆
திரு நரசிங்கத் திருமாலே⋆
    நின் திருவடி அடைந்தேன் அடியேனே! (5)

ஸ்ரீ காரஞ்ச நரசிம்மர்

வருவாய் அங்கே ஆளரியாய்⋆
    வானர வீரன் சொல் இணங்க⋆
திருவாய் காட்சி தனுசுடனே⋆
    தரமுடன் அனந்தன் தலை வணங்க⋆



www.prapatti.com

குருவாய் அமர்ந்தாய் யோகத்திலே⋆
    கருவாய் நின்றோம் ஞானத்திலே⋆
திரு நரசிங்கத் திருமாலே⋆
    நின் திருவடி அடைந்தேன் அடியேனே! (6)

### ஸ்ரீ பார்கவ நரசிம்மர்

பெருஞ்சின ராமன் தவமிருக்க⋆
    பல்லருள் செய்த பெரு மாயா⋆
கருங்குடலை குடைந்து எடுத்து⋆
    மாலை கொண்ட பெரு வாயா⋆
வெருவுரை கேட்டு வருவினை விலக⋆
    வரித்தோம் எங்கும் அரிநாமா⋆
திரு நரசிங்கத் திருமாலே⋆
    நின் திருவடி அடைந்தேன் அடியேனே! (7)

### ஸ்ரீ யோகாநந்த நரசிம்மர்

திருப்பணி செய்ய சிறுவனுக்கு⋆
    யோகம் சொன்ன பெரு மானே⋆
இருவினை கழற்றி இன்ப நதி⋆
    போகம் அளிப்பாய் பெரு வானே⋆
கருமணி வண்ணா கண்ணா⋆
    காதல் கொண்டேன் காவலனே⋆
திரு நரசிங்கத் திருமாலே⋆
    நின் திருவடி அடைந்தேன் அடியேனே! (8)

### ஸ்ரீ சத்ரவட நரசிம்மர்

திருவடி மடித்து அமர்ந்தாயே⋆
    தாமரை நிலையில் அருளாலே⋆
திருநூல் கொண்டு மகிழ்ந்தாயே⋆
    மரவரசன் கீழ் தெருளாலே⋆

www.prapatti.com

திருவின் சொல்லில் உகந்தாயே⋆
தவிக்கும் சேதனன் இருளாலே⋆
திரு நரசிங்கத் திருமாலே⋆
நின் திருவடி அடைந்தேன் அடியேனே! (9)

### ஸ்ரீ பாவன நரசிம்மர்

இருப்பாய் செஞ்சுவின் மோகத்திலே⋆
கொஞ்சிடும் பாவனக் கரையினிலே⋆
திருவைக் கொண்டாய் மடியினிலே⋆
தேசுடன் அரவின் தலை கீழே⋆
விருந்தும் நீயே விதியும் நீயே⋆
மருந்துமாவது மாதவன் தாளே⋆
திரு நரசிங்கத் திருமாலே⋆
நின் திருவடி அடைந்தேன் அடியேனே! (10)

### மங்களம்

அருமறை கருத்தை ஆழ்ந்தலசி⋆
பொறுமையிலா வெறுமை பேசி⋆
தரும மறையோர் தனி உரையால்⋆
கருமமவை துணை இலையால்⋆
செருவானும் வழியும் நீயே⋆
சினம் நீக்க சரணே சாக்கே⋆
திரு நரசிங்கத் திருமாலே⋆
நின் திருவடி அடைந்தேன் அடியேனே! (11)



www.prapatti.com